


# காணிக்கை

தொகுப்பு

எம்.ஏ.சீ.எம். ஜுஹைஸ்


2009 பெப்ரவரி 22

## சமர்ப்பணம்

| | |
|---|---|
| ஷெய்க், இஸ்மாயில் யெமானி (றலி) | - புதல்வன் |
| ஷெய்க், அப்துஸ்ஸமது யெமானி (றலி) | - தனயன் |
| ஷெய்க், அப்துல் வஹாப் யெமானி (றலி) | - மக்கள் |
| ஷெய்க், அப்துல் வாஹித் யெமானி (றலி) | - தங்கை |
| ஸெய்யித் துஹ்பா உம்மா வலி | - கணவன் |
| கலிபத்துல் காதிரி அப்துஸ்ஸமது ஆலிம்(றலி) | - மருமகள் |
| ஸெய்யித் பஸ்லூன் உம்மா வலி | - அவர் குருநாதர் |
| ஷெய்க் ஹல்லாஜுல் மன்ஸூர் (றலி) | - ஆழ்வாய் |

ஷெய்க் முஹம்மது ஜலாலுத்தீன் (றலி)

மெய்நிலை கண்டஞானி எல்லோருக்கும்.............



| | |
|---|---|
| **முதற்பதிப்பு** | **2009** |
| **வெளியீடு** | **மஹ்ழறத்துல் காதிரிய்யா,**<br>**ஹல்லாஜ் மகாம், அக்கரைப்பற்று.** |
| **ஆசிரியர்** | **எம்.ஏ.சீ.எம்.ஜுஹைஸ்** |
| **பதிப்புரிமை®** | **ஹல்லாஜ் மகாம்** |
| **நூலின் அளவு** | **A5 (15*cm* X 21 *cm*)** |
| **பிரதிகள்** | **இலவசம்** |
| **புகைப்படம்** | **1- பக்கம். ii** |



# ஆத்மாவின் பூரிப்புக்கள்

| | | பக்கம் |
|---|---|---|
| 01. | உதயத்தின் திறப்பு | 01 |
| 02. | காணிக்கையின் சிறப்பு | 04 |
| 03. | பரிசுத்த அஹ்லுல் பைத்தின் பாரம்பரியத்தில் | 11 |
| 04. | நேசர்தம் வாழ்வியலை நினைவூட்ட நினைவூட்ட | 13 |
| 05. | இன்னுமொரு நாள் | 17 |
| 06. | நல்லாசி பொழிந்து வருகவே | 22 |
| 07. | அருள் கூடவே வழி நாடவே | 26 |
| 08. | வானிருக்கும் நாள்வரைக்கும் | 28 |
| 09. | தருமத்தின் நாதரே | 31 |
| 10. | ஷேகே இல்லாத பாதை திசைமாறுமே | 33 |
| 11. | வரவேற்பின் முத்தாய்ப்பாய் | 35 |

# உதயத்தின் திறப்பு

சமகாலத்து சமூகத்திற்கு பங்களிப்புச் செய்த நந்நிகழ்வுகளையும் நட்புக்களையும் எதிர்வரும் சந்ததியினரின் அகன்ற பரப்புக்குள் உத்வேகத்துடன் பாய்ச்ச எடுக்கும் எத்தனங்கள் இலக்கியங்களை விசாலித்து வலம்படுத்துகின்றன. நல்ல செய்திகளையும் காத்திரமான கருத்துக்களையும் சுமந்து செல்லும் இலக்கியங்களால் மனித வர்க்கத்தின் போக்கும் திசையும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு சிறு அம்சம் கூட மக்கள் மத்தியில் பெரும் எழுச்சியையும் புரட்சியையும் உண்டுபண்ணியிருக்கின்றது. ஏனென்றால் மனித நுண்ணிய உணர்வுத்தளங்களை சத்திர சிகிச்சைசெய்யும் சக்தி இலக்கியங்களைச் சார்ந்து நிற்கின்றன. சில இலக்கியங்கள் காலம் கடந்தும் ஜீவிதம் செய்வதற்கு காரணம் இதுவேயாகும்.

ஓர் எழுத்தாளனின் பேனா மை வரண்டு உலர்ந்த மானுட வாழ்வை ஈரப்படுத்தி பசுமையளிக்கின்றது. வாழ்வில் பிடிப்பையும் ஆர்வத்தையும் தூண்டுகின்றது. அவன் வாழ்வோடு ஒதுக்கப்பட்ட எழுத்துக்கள் காலங்கடந்து நின்று மக்களுக்குச் சேவை செய்திருப்பதை நாம் இலக்கியப் பாரம்பரியங்களினூடாக கண்டு வந்திருகின்றோம். இது இலக்கியத்தரமுடையது. இது இலக்கியத்தரமற்றது என்பதை காலம் தான் தீர்மானிக்கின்றது. ஓர் இலக்கிய கர்த்தாவின் பணி அவனையும் அவன் வாழ்ந்த சூழலையும் ஆக்கிரமித்த விடயங்களையும் எழுத்தோவியமாகத் தீட்டுவதே.

குதர்க்கங்களை குத்தகைக்கு எடுத்து, சாமான்யர்களை சூனியப் படுத்தும் இக்காலத்தில், இறைகாதல் வயப்பட்டு ‘விலாயத்’ எனும் இறை நெருக்கம் பெற்று ஆன்மீக கிலாபத்தை சுமந்த மாபெரும் ஸூ.ஃபி மகான் ஒருவருக்கு முரீதீன்கள் முஹிப்பீன்கள் அளித்த வரவேற்பு பெருவிழா மெச்சத்தக்கது. அவ்விழாவில் எழுதி வாசிக்கப்பட்ட வாழ்த்துக்கவி, வரவேற்புக்கவி, பாடல்கள் போன்றவை எப்போதும் நயக்கக் கூடியவை. அது ஒருபுறமிருக்க



ஆத்மீக தாகங்கொண்டோருக்கு விருந்தாக அமையக்கூடியதுவும் ஏகத்துவத்திலும் மேலும் நம்பிக்கையையும் தைரியத்தையும் அளிக்க வல்லது.

நபியென்றும், றஸூலென்றும் குத்புஸ்ஸமான் என்றும், அவ்லியா என்றும் ஏற்றுக்கொண்டோர்களும் உறுதிபடுத்தியவர்களும் அவர்களை சூழ்ந்திருந்த தோழர்களேயாகும். அவ்வாறே இவர்களோடு பல வருடங்கள் கலந்து ஒன்றாய் உண்டு, உறங்கி மிக நுணுக்கமாக நோக்கியறிந்த முரீதீன்கள் இவர்களை நேர்வழி காட்டக்கூடிய குத்புஸ்ஸமான், காமில் ஷெய்க் என்பதை ஐயமற அவர்களின் ஆக்கங்களில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இவர்களின் ஆக்கங்கள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் வெளிப்படுத்த எத்தனிக்கும் கருப்பொருள் இவ்விறைஞானி உண்மையான காமில் ஷெய்க் என்பதைத்தான். இச்செய்தியை தற்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் தெளிவுபடுத்துவதற்காக கவிவளப்படுத்தியுள்ளனர். இவர்களின் இம்முயற்சியும், பணியும் தொகுப்பாக்கப்பட வேண்டும். அவ்வகையில் அமைந்த இத்தொகுப்பு **‘காணிக்கை’** எனும் பெயரில் வெளியிடப்படுகின்றது. தற்காலத்து ஈழத்து முஸ்லிம் கவிஞர்களில் கீர்த்திக்குரியவர் பாலமுனை பாறூக். அவரின் கவிதையும் அவர் இயற்றிய பாடலும் இந்நூலில் இடம்பெற்றிருப்பது சிந்தை கொள்ளத்தக்கது.

‘நல்லாசி பொழிந்து வருகவே’ என்ற தலைப்பில் எழுதப்பட்டிருக்கும் ஆலிம் பிர்னாஸின் கவிதை சிந்தனைக்குரியது. ஏனென்றால், அல்குர்ஆன், அல்ஹதீஸ்களை கற்றுத்தேர்ந்த ஆலிம் தன் அனுபவங்கள் அடிப்படையில் அவர்களை நோக்கி, இவர்கள் உண்மையான வழிகாட்டி என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். அது போலவே ஏனைய ஆசிரியர்களும் கவிதைகள் கருத்துச் செறிவுகளோடு கட்டியங்கூறி நிற்கின்றன. மொத்ததில் இக்கவிதை நூலில் இடம்பெற்றிருக்கும் அனைத்தும் உணர்வுகளுக்கு தீனி போடக்கூடியதும், பாராட்டத்தக்கதுமாகும்.

இத்தொகுப்புக்கு கவிதைகளைத் தந்துதவிய வங்கி முகாமையாளர், பாலமுனை பாறூக், ஆசிரியை திருமதி தாஜுன்னிஸா, ஆலிம் பிர்னாஸ், ஆசிரியர் மஹ்பூர், ஆசிரியர் சாய்ந்தமருது பைஸர் ஆகியோருக்கு நெஞ்சாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தொகுப்பை உருவாக்க முன்னின்று உழைத்தவரும், நிதியுதவி வழங்கியவரும், சிறப்புரையொன்று தந்துதவியவருமான ஆசிரியர் வாஹிதிற்கு சிறப்பான நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மற்றும் கணணி எழுத்துக்கோர்ப்பினை மேற்கொண்ட சாதிக் (Good Will), கணணி இறுதிவடிவமைப்பினை மேற்கொண்ட Effke.com, அச்சிட்டுத் தந்துதவிய அச்சக உரிமையாளர் சிறாஸ், கலேவெல HLM அக்ரம் ஆகியோருக்கும் என் நன்றியறிதலைக்கூறிக் கொள்கிறேன்.

'நன்றி'
ஆசிரியர் எம்.ஏ.சீ.எம். ஜுஹைஸ்
அக்கரைப்பற்று
2009.02.11



## காணிக்கையின் சிறப்பு

சங்கைக்குரிய குதுபுனா அப்துல் மஜீத் மக்கத்தார்(றலி) அவர்களுக்கு 2009.01.29 (1430 ஸபர் 04) ம் திகதி அளிக்கப்பட்ட வரவேற்பு பெருவிழா பல சிறப்பம்சங்களைக் கொண்டு காணப்பட்டன. அப்பெருவிழாவை கல்முனை, சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை, பாலமுனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று முதலான பிரதேச முரீதீன்கள், முஹிப்பீன்கள், உறவினர்கள் முதலானோர்கள் சேர்ந்து ஏற்பாடு செய்திருந்தனர். இவ்விழா வெகு விமர்சையானதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுவும் ஆகும்.

இவ்விழா நிகழ்வுகளுக்குள் செல்வதற்கு முன் இம்மகானோடு எனக்குள்ள உறவையும் தொடர்பையும் ஓரளவு தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. சிறு பராயத்தில் இருந்து இவர்களொடு ஏற்பட்ட தொடர்பானது இற்றை நாள்வரை என்னை பல வழிகளிலும் வளர்த்து வழிநடாத்தி இருக்கின்றது.

இம்மகான் ஆசிரியராக சமூகத்திற்கு பணி செய்யத்தொடங்கி, பின் அதிபராகவும் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் விரிவுரையாளராகவும் தேசத்தின் புகழ்பூத்த நிகரற்ற ஒரு கலைஞனாகவும் மக்களுக்கு வழிகாட்டும் ஆத்மீக குருவாகவும் விளங்கிக்கொண்டிருக்கும் அல்குத்ப், மக்கத்தார் நாயகம் அவர்கள் இசைத்துறையில் அளவற்ற ஆற்றல் கொண்ட ஒருவராக, இருந்து வருகின்றனர். இவர்கள் இசையமைத்துப்பாடிய பாடல்கள் இலங்கை வானொலி இஸ்லாமிய சேவையில் ஒலிபரப்புச் செய்யப்பட்டதுடன், புஹாரி ஆலிமால் ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுஸைனை வாழ்த்தி எழுதப்பட்ட பாடலை இசையமைத்துப் பாடி, ஈராக் வானொலியிலும் கூட ஒலிபரப்புச் செய்யப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அல்குத்ப், பாவலர் ஹாஸீம் ஆலிம் (மூத்தாலிம்)

எழுதிய பாடல்களையும் இசையமைத்துப் பாடியுள்ளனர். ஒரு உண்மைக் கவிஞரும் எழுத்தாளரும் இயற்கையை இயற்கைப்படுத்தும் ஓவியரும் பல்துறைப் பேரறிவாளியாகவும் இருக்கும் இவர்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம், மலையாளம், அறபிக் முதலான மொழிகளைப் பேசக்கூடிய பன்மொழி அறிஞருமாவார்கள். இவர்களோடு, என்னளவில் ஒரு நீண்ட வரலாற்றுத் தொடர்பை உருவாக்கியிருக்கின்றது.

நான் ஒரு விஞ்ஞானப் பட்டதாரியும் முதுமாணிப்பட்டம் பெற்றவனும் இவ்உயர் நிலைக்குச் செல்வதற்கும், நான் ஆசிரியத் தொழிலைத் தெரிவு செய்வதற்கும், இவர்கள் மீது எனக்கேற்பட்ட ஒருவித ஈர்ப்பே காரணம் எனலாம். என் வாழ்க்கை வரலாறு போரியல் நிறைந்ததாகும். உடலோடு சங்கமித்த தீராத நோய்களைப் பல வைத்தியர்களாலும் குணப்படுத்த முடியாமல் கைவிடப்பட்ட நிலையில் அவர்களோடு அனுகியே என் உடல் நோய்களையும், உளநோய்களையும் தீர்த்துக் கொண்டவனும் என் ஆத்மீக லௌகீக இரு வாழ்விற்கும் உரிய ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் இவர்களிடம் இருந்தே பெற்றுக் கொள்கிறேன். இவர்கள் ஒரு உத்தம புருஷர் என்றே கூறவேண்டும். இவர்களைப்போல் ஒரு புண்ணிய மனிதரை எங்கும் காணமுடியாது என்பதை திடமாக என்னால் கூறமுடியும்.

தொழில் நிமித்தமாக பல பிரதேசங்களிலும் பல்தரப்பட்ட பேரறிஞர்களோடும் கூடியும், குலாவியும் இருக்கின்ற அனுபவம் எனக்குண்டு. அத்தனைபேரிலும் காணாத பல சிறப்பம்சங்களையும் முன்மாதிரிப் பண்புக்கோலங்களையும் இவர்களில் கண்டுவியந்து அனுபவித்து அவர்களை நடத்தையின் பால்மோகம் கொண்டவனும் கூட.

ஒரு முன்மதிரி மனிதனுக்கு இருக்க வேண்டிய அத்தனை இலக்கணங்களையும் இப்பெரியார் கொண்டிருக்கின்றனர். பல்துறை அறிஞர்களை ஒன்று சேர்த்தாலும் இவர்களுடைய அறிவிற்கும் ஆற்றலுக்கும் நிகர் கிடையாது என்பதை ஆணித்தரமாக



கூறுவேன். கரைகடந்த ஒரு அறிவாளி, சதா மற்ற மனிதர்களின் வாழ்விற்காய் தம் வாழ்வைப் பொசுக்கிக் கொண்டிருக்கும் உத்தம சீலர், அன்பு நிறைந்த பெரும் தியாகி, பொருளாலும் உடலாலும், மனதாலும் இரவு, பகல் பாராமல் சமூகத்திற்காக மனிதர்களின் அல்லல்களை தீர்ப்பதற்காக உழைத்துக் கொண்டிருக்கும் உண்மைக்கு உண்மையான ஒரு பெரியார். எவர் வாழ்வைச் சூறையாடியதோ, எவரையும் மானபங்கப்படுத்தியதோ அவர்களின் வாழ்வோடு ஒருவினாடி கூட கலந்திருக்க முடியாது. தினம் அவர்களொடு நானும் என் வாழ்வும் சங்கமமாயிருக்கின்றது என்பதால்தான் அவர்களின் பண்புகளுக்கும் முன்மாதிரிகளுக்கும் உறுதிமொழி வழங்குகின்றேன். இப்படிப் பல்நிலையிலும் உயர்ந்த ஒரு பெரும்மகானுக்கு முரீதீன்கள், முஹிப்பீன்கள் அளித்த வரவேற்பு நிகழ்வில் வாசிக்கப்பட்ட, பாடப்பட்ட பாடல்கள் தொகுப்பாக வெளிவர இருப்பதை எண்ணி புளகாயிதம் அடிகின்றேன். இந்நிகழ்வில் பல அந்தரங்கமான அம்சங்கள் உட்பொதிந்திருக்கின்றன. பல முரீதீன்கள் இறைமுடுகுதல் பெற உதவியிருக்கின்றது. இவ்வரலாற்று நிகழ்வு வரலாற்றுச் சுவடாக மாற்றப்படுவது வாழ்த்தத்தக்க விடயமே.

இந்த நூலில் காணப்படும் ஆக்கங்கள் அனைத்தும் இலக்கியத் தரமுடையவை. புதுக் கவிதைப்பாங்கில் அமையப்பட்ட கவிதைகளும், வாழ்த்துப்பாக்களும், பாடலும் இரசிக்கக் கூடியவை. தற்கால இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களில் முக்கியத்துவம் வாய்ந்த ஒருவராக கவிஞர் பாலமுனை பாறூக் மிளிரிக் கொண்டிருக்கின்றார். இவர் இளம் பாராயத்தில் இருந்து பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் கவிதைகளை யார்த்துக் கொண்டிருப்பவர். இவரின் படைப்பில் ஒரு சில கவிதை நூற்களும் வெளிவந்திருக்கின்றன. இக்கவிஞன் இளம் வயதில் இருந்து மக்கத்தார் வாப்பாவோடு கண்டனுபவித்த அம்சங்களை கவிதை மூலம் வெளிப்படுத்தியிருப்படது கவனிக்கத்தக்கது.

*எதையும் ஆய்வொழுங்கில்*
*எடுத்தோதி, உறுதி செய்து*
*உளவியலை, உணர்வலையை*
*உணர்ந்து பயன்படுத்தி*
*முரீதீன்கள் விளங்கவென*
*நகைச்சுவையாய் கதைசொல்லி*
*அறிவு தரும் ஆத்ம குரு*
*அன்பாளர் பண்பாளர்*
*அறிவொளிரும் பேராளர்*
*மக்கத்தார்....*

என்ற அடி அவரின் இயற்கை உணர்வலையில் இருந்து ஊற்றுப் பெற்றதாகும்.

சில வருடங்களாக, மக்கத்தார் வாப்பாவோடு தொடர்பு பட்டிருக்கும் மௌலவி பிர்னாஸ் ஏழு வருடங்கள் மத்ரஸா வாழ்வில் தான் பெற்ற அனுபவங்களை இஸ்லாத்தின் பார்வையோடு கவிதையாக்கியுள்ளது அவரின் சிறப்பம்சமாகும்.

*ஞானவழி யோகிகளின்*
*ஞானத்தின் திறவுகோல்*
*வள்ளல் றஸூலை*
*வாகாய்ச் சுமந்த*
*வானகத்து ஞானி*
*பாவிகளிலும்பெரும் பாவிகள் – எம்மை*
*தீனுல் இஸ்லாத்தின்*
*தூதில் துவட்டிட*
*வினயமுடன் வாருங்கள்.....*



என்ற அவரின் கவிதைக்கு அலங்காரம் செய்திருக்கின்றது. மக்கத்தார் வாப்பா அவர்களை நேர்வழி பெற்ற ஷெய்காக ஏற்று நமது அவலநிலையையும் கவியாக்கியுள்ளது மேலும் கவிதை இரசனையைக் கூட்டுகின்றது.

ஆங்கில ஆசிரியையாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் திருமதி. தாஜுன்நிஸா வரவேற்புப் பெருவிழாவின் நிகழ்ச்சி நிரலை கவித்துவப்பாங்கில் எடுத்தோதியிருக்கின்றார். இவரும் மக்கத்தார் வாப்பாவோடு நீண்ட நாள் தொடர்பு கொண்டவர். **'இன்னுமொரு நாள்'** எனும் தலைப்பில் கோர்த்திருக்கும் கவித்துளிகள் உணர்வலையைத் தூண்டக்கூடியது

*சன்மார்க்க கீதமும்*
*ஸலவாத்தின் சங்கை நாதமும்*
*முழங்கட்டும்!*
*சத்திய போதகர் நெறியும்*
*சத்திய வழியும்*
*ஓங்கட்டும்! – அதை*
*சனங்கள் கூடி களிக்கட்டும்...*

ஒரு சாதாரண நிலையில் நேரில் கண்ட அம்சங்களைப் புதுக் கவிதையாய் வடித்திருப்பது வாழ்த்தத்தக்கது.

**'வானிருக்கும் நாள்வரைக்கும்'** அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஆசிரியர் மஹ்பூர் அவரின் கவிதை வாசகர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடியது.

*ஹல்லாஜ் மகாமெனும்*
*ஆத்மீக ஆலையிலே!*
*புடம் போடப்பட்ட*
*மாசிலாத் தங்கம் – எங்கள்*

*மக்கத்தார் வாப்பா – அவர்*
*சுய விருப்பின் பேரில்*
*பேசியதில்லை ஒரு நாளும்*
*இறைவாக்கு அன்றி*
*பிறவாக்கு சொன்னதில்லை....*

எனும் கவித்துளி கவிதை ஆக்க நுழைவுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கி நிற்கின்றது

சாய்ந்தமருதைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர் பைஸர் அவர்களின் இரு கவிதைகள், வரவேற்புப் பாடலாகவும் வாழ்த்துப் பாடலாகவும் அமைந்திருக்கின்றது. அவரின் வாழ்த்துப்பாவில் இருந்து

*குறைஷி நபி இணைப்பில்*
*எமனி வழி தொடரில்*
*நான் உம் அருள் நாடவா*
*மெய்ஞான தேன் அமுதே*
*அப்துஸ்ஸமதின் மலரே*
*அருள் கூடவே வழி நாடவே*
*மக்கத்தாரைப் போற்றிப் போ...*

வரவேற்புப் பாடலில் இருந்து

*எங்கள் வழியில் ஞானம் மிளிர*
*உயர்வு நிலைகாணவே*
*இன்ஷானுல் காமிலாகவே*
*உண்மை நிலை தோன்றவே*
*உங்கள் சேவை என்றும் நாங்கள்*
*சுவன நிலை நாடவே....*

என்ற இரு கவி அடிகளும் வியக்கத்தக்கது



கவிஞன் பாலமுனை பாறூக்கினால், எழுதப்பட்ட வரவேற்புப் பாடலை மஜீதும், லாபிரும் பாடியிருக்கின்றனர். இதில் வரும்

*உம் பாதம் சுமந்து நாங்கள்*
*நிதம் வாழ்கிறோம்*
*உம் நேசம் கண்டு நாங்கள்*
*தினம் மகிழ்கிறோம்*
*நாதரே உம் வரவினால்*
*எம்முள்ளம் மலருதே ஷேகே...*

என்ற அடிகள் மக்கத்தார் வாப்பாவை வரவேற்பதில் அடைந்த சந்தோசத்தின் வெளிப்பாட்டை சித்தரித்துக் காட்டுகின்றது. வரவேற்பின் முத்தாய்ப்பாய் அமைந்திருக்கும் மக்கத்தார் வாப்பா அவர்களின் உரை தொகுக்கப் பட்டிருப்பது விருப்பத்திற்குரியதாகும். ஆக இத்தொகுப்புக்கள் இடம் பெற்றிருக்கும் அனைத்தும் சிறப்புக்கள் எனும் பூவால் ஒரு நந்தவனத்தையே உருவாக்கி நிற்கின்றது. இக்கவிதைகள் அனைத்தும் ஷேகுனா மக்கத்தார் வாப்பாவின் உண்மை நிலையை அடிப்படையாகக் கொண்டிருப்பதே விஷேட பண்பாகும். எல்லாம் உள்ளவை உள்ளபடி எவ்வித புனைவுகளும் இன்றி கூறுகின்றன. இத்தொகுப்பு முயற்சி என்றும் வரவேற்கத்தக்கது.

**'காணிக்கையின் சிறப்பு'** எனும் தலைப்பில் எனக்குக் கிடைத்திருக்கும் இப்பாக்கியத்தை எண்ணி அகங்குளிர்ந்தவனாய் அம்மகானின் அருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று இறையஞ்சி இவ்வாக்கத்தில் எனக்களித்த வாய்ப்புக்கு நன்றிகள் பல கூறி முடிக்கிறேன்.

நன்றி
வஸ்ஸலாம்

ஆசிரியர் M.A. அப்துல் வாஹித்
(BSc, MSc, PGDE)

## <u>பரிசுத்த அஹ்லுல் பைத்தின் பாரம்பரியத்தில்</u>

செய்யிதினா அமீருல் மு.்.மினீன் ஹுஸைன் (றலி)

**தாய்வழி** | **தந்தைவழி**

செய்யிதினா அமீருல் மு.்.மினீன் அபூபக்கர் சித்தீக் (றலி) + செய்யிதினா அப்பாஸ்(றலி)

↓

அல்குத்ப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் மூஸா அல் காழி(றலி)

↓

அல்குத்ப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் ஸனூஸி அர்-றபாஹிய்யி யமானி(றலி)

↓

அல்குத்ப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் அப்துல்லா யமானி (றலி)

↓

அல்குத்ப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் ஸாலிஹ் யமானி (றலி)

↓

அல்குத்ப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் இஸ்ஸத்தீன் யமானி (றலி)

↓

அஸ்ஸெய்யிதா பாத்திமா ஹுஸைனி (வலி) + அல்குத்ப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் இஸ்மாயில் யெமானி (றலி)

↓

அல்குத்ப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் அப்துஸ்ஸமது மௌலானா யமானி (றலி)



அல்குத்ப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் அப்துஸ்ஸமது மௌலானா யமானி (றலி)

↓

கலீபத்துல் காதிரிய்யி அபூபக்கர் ஆலிம் (வலி) + அஸ்ஸெய்யித் றைஹானத்தும்மா (வலி)

அல்குத்ப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித்அப்துல் வஹாப் மௌலானா (றலி) + அஸ்ஸெய்யித் புஆத் உம்மா (வலி)- யாஸீன் மௌலானாவின் மகள்

↓

அல்குத்ப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் கலீபத்துல் காதிரிய்யி அப்துஸ்ஸமது ஆலிம் மக்கத்தார் (றலி) + அஸ்ஸெய்யித் துஹ்பா உம்மா (வலி)

↓

அல்குத்ப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் அப்துல் மஜீத் மக்கத்தார் (றலி)

## நேசர் தம் வாழ்வை
## நினைவூட்ட ...நினைவூட்ட...

*வாருங்கள் நாங்கள்*
*வாப்பாவை வரவேற்போம்!*
*வாசமலர் பாசமலர்*
*வாஞ்சையுள்ள நேசமலர்*
*ஆசைமலர் எங்கள்*
*அகம் பூத்த அன்பு மலர்*
*மக்கத்தார் என்றே நாம்*
*மகிழ்ந்தேற்றுக் கொண்ட மலர்*
*இப்போதும்...... இங்கே*
*எம்மோடு இணைந்தபடி.........*

*வாருங்கள் நாங்கள்*
*வாப்பாவை வரவேற்போம்!*
*வாசமலர் அதனின்*
*வாசத்தை நுகர்ந்தவரே!*
*பாச மலர் அதனில்*
*பரிவில் நனைந்தவரே!*
*இறை -*
*நேசர்தம் வாழ்வியலை*
*நினைவூட்ட .........நினைவூட்ட.......*
*நேர்கண்டு சுகித்தவரே!*

*வாருங்கள் நாங்கள்*
*வாப்பாவை வரவேற்போம்!*
*எதையும் ஆய்வொழுங்கில்*
*எடுத்தோதி உறுதிசெய்து,*



*உளவியலில் உணர்வலையை*
*முரீதீன்கள் விளங்கவென*
*நகைச்சுவையாய்க் கதைசொல்லி*
*அறிவு தரும் ஆத்மகுரு,*
*அன்பாளர் பண்பாளர்*
*அறிவொளிரும் பேராளர்....*
*மக்கத்தார்-*

*வாருங்கள் நாங்கள்*
*வாப்பாவை வரவேற்போம்!*
*புத்திதொட எட்டாத*
*புதையல்களை, உட்பொருளை,*
*அற்புதமாய் தன்னுடைய*
*ஆற்றலினால், அனுபவத்தால்*
*அகமியத்தால், செப்பனிட்டு,*
*நுட்பமாய்ச் சீடர்களின்*
*நுண்ணுணர்வைக் கூராக்கி*
*சீர் செய்யும் பேர் ஆசான்*
*ஸெய்யித் அஷ்-ஷேகு*
*அப்துஸ் ஸமத் ஆலீம்*
*அப்துல் மஜீத் என்ற*
*மக்கத்தார் வாப்பாவை*
*மனம் மகிழ்ந்து வரவேற்று*
*வாழ்த்துரைப்போம் வாருங்கள்!*

*வாருங்கள் நாங்கள்*
*வாப்பாவை வரவேற்போம்!*
*தொழிலால் அவர் ஆசிரியர்*
*தொடர்ந் துயர்ந்து*
*அதிபராய்ச் சிலகாலம்.........*
*அதன் பின்னே........*
*கலாசாலை விரிவுரையில்*

*பாட்டு, சங்கீதப்*
*போதனையில் சில காலம்....*
*போய் முடிய...*
*ஓவியராய் பாடகராய்ச்*
*சோபித்து....*
*கலாபூஷணம் என்ற*
*கௌரவமும் பெற்றெடுத்தார்*
*என்றாலும் இதற்கெல்லாம் மேலாக*
*இரசிகன் நான் என்பதில்தான்*
*இவருக்கு உடன்பாடு!*

*இதமாய்ப் பக்குவமாய்*
*இரசித்து... மிக அழகாய்*
*கருத்துக்கள் கூறும்*
*கலா ரசிகன்....*
*கனதியும் காத்திரமும்*
*வழியும் அவர் விமர்சனத்தில்.....*

*வாருங்கள் நாங்கள்*
*வாப்பாவை வரவேற்போம்!*
*மன நலனைத் தேடுபவர்*
*குண நலனை நாடுபவர்*
*என்று பலர் தினமும்...*
*அண்டி வருபவரை ஆதரித்து..*
*சேவையென*
*சிகிச்சையினை, வைத்தியத்தை*
*சிறப்பாய் செய்துவரும்...*
*வாப்பாவை!*



*வரவேற்று பாப்பொழிந்து*
*வாழ்த்துறைப்போம் வாருங்கள்!*
*தரீக்கா வாழ்க்கையினை*
*சரியாகக் கற்பித்த*
*ஹல்லாஜ் மன்ஸூர்*
*வாப்பாவின் பிள்ளையினை*
*அடுத்ததொரு வாரிசாய்*
*அவரே பயிற்றுவித்த*
*ஏக கலீபாவை...*
*காதிரி, ஜிஷ்தி*
*றிபாஇய்யி, நக்ஷபந்திய்யி,*
*தரீக்காக் களுக்கான*
*தலைமை பதவியினை*
*தக்கபடி பெற்றெடுத்த*
*மக்கத்தார் வாப்பாவை...*
*மகிழ்ந்து, மனங்குளிர்ந்து*
*வாழ்த்தி வரவேற்போம்*
*வாருங்கள்!*

*வாருங்கள் நாங்கள்*
*வாப்பாவை வரவேற்போம்!*

கவிஞர் பாலமுனை பாறூக்,
(முகாமையாளர் இலங்கை வங்கி)
பாலமுனை.

# இன்னுமொரு நாள்...

*இன்னுமொரு நாள்... இந்த நாள்...*
*இந்த இனிய நாள்..*
*இன்பமுடன்*
*மொட்டவிழ்ந்து*
*இதழ் விரிந்து*
*கனமாய், காரமாய்*
*பூத்து விரியட்டும்!*
*அதனால்*
*மனித மனங்கள்*
*விழிக்கட்டும்!*

*சன்மார்க்க கீதமும்*
*ஸலவாத்தின் சங்கை நாதமும்*
*முழங்கட்டும்!*
*சத்திய போதகர் நெறியும்*
*சத்திய வழியும்*
*ஓங்கட்டும்! – அதை*
*சனங்கள் கூடி களிக்கட்டும்!*

*முஸ்லிம் தேசிய நாயகன்*
*தேசிய அமைச்சர்*
*அதாவுல்லா...*
*குறு நில அமைச்சர் உதுமான்..*
*குற்றூர் தலைவன்*
*தவமும்- மாலை*
*அணிவித்து வரவெற்கட்டும்!*
*ஆலிங்கணஞ் செய்து அழைத்து வரட்டும்!*
*வாழ்த்துக்கள் சொரிந்து வரவேற்கட்டும்.*



*வீதியின் குறுக்கே - அமைந்த*
*தோரணங்களும்*
*தெருவோர அலங்காரங்களும் – தோரண*
*மின் விளக்குகளும்*
*வாழ்த்துக்கூறி வரவேற்கட்டும்!*

*குலவை வீடும்*
*மங்கையரும்- தேன்*
*நிலவுக்குப் பரிசம்*
*போடட்டும்!*

*மகளிரும் ஆடவரும்*
*அணியணியாய் நின்று*
*தீனுல் இஸ்லாத்தினை*
*முழக்கம் செய்யட்டும்!*
*நாரைய தக்பீர்*
*அல்லாஹு அக்பர்- என*
*உரத்து மொழிந்து*
*சத்திய நாதரை*
*வரவேற்கட்டும்!*

*பன்னீர் செம்பெடுத்து*
*பன்னீர் தெளிக்கட்டும்!*
*அத்தர் வீசி*
*தென்றலுக்கு நிறம் பூசட்டும்!*

*-கவிஞர்-*
*பாலமுனை பாறுக்கின்*
*கவித்துளிகள்*

*-ஆலிம்-*
*பிர்னாஸின்*
*கவித்துளிகள்*

*வாழ்த்துப்பாக்கள்*
*வரவேற்பு கீதங்கள்*
*வாழ்த்தி வரவேற்கட்டும்!*

*பக்கீர்களும்*
*முரீதீன்களும்*
*பைத்துக்கள் இசைத்து*
*றபான் வாத்திய இசையில்*
*அழைத்துச் செல்லட்டும்!*

*செங்கம்பளமும்*
*வெள்ளையும்*
*விரித்து...*
*விரிந்த மலர்கள் – நல்ல*
*மணமலர்கள்*
*பறித்து... எடுத்து தூவி*
*வரவேற்கட்டும்!*

*ஆத்மீக பேரரசின்*
*மகாராஜனை*
*தெய்வ பக்தர்களும்*
*சீட கோடிகளும்*
*வரவேற்றதை*
*தடயங்கள், எச்சங்கள்*
*அடையாளப்படுத்தட்டும்!*

*இந்த வானும்*
*வான் மீனினங்களும்*
*வான் மதியும்*
*வானகத்துப் பகலவனும்*
*சோபனங்கூறும்*
*அத்தர் மழை.. கன மழை*
*பொழியும்*



*பொன்னெழில் இயற்கையும்*
*இந்தப் பூமியும்*
*நம் தேசமும்*
*நமது மண்ணும்*
*வல்லோன் மன்றில்- இந்*
*நற்செய்திக்காய்*
*தூது போகட்டும்...! – இவை*
*நாளை நமக்காய்*
*நற்சான்று கூறட்டும்!*

*சத்திய கீறல்களால்*
*எதிர்கால*
*சந்ததியினர்*
*ஸூ.்.பித்துவ*
*சித்திரங்களை*
*வரையட்டும்...!*

*மறைமுறை மாண்பினையும்*
*மாநபி மகிமையினையும்- இதனில்*
*மருவி உலவும்*
*உண்மைகளையும்-கை*
*நழுவிய காலத்தையும்*
*தழுவி நின்ற பாதைகளையும்*
*ஒப்பிட்டு – காலம்*
*கடந்தாவது உணரட்டும்! – அவ்*
*உணர்வுகளால், ஊமையாய்...குருடாய்...*
*உறங்கிய யதார்த்தங்களை-மனம்*
*இரங்கி கசிந்து*
*சித்தரிக்கட்டும்!*

*பரமானந்த வாழ்வின்*
*மோன நிலை... மோக நிலை.. ஞான நிலை*
*அற்ப மாயங்களின்*
*அடர்ந்தேறல்களில்*
*மயங்கி... கசங்கி..*
*மிதிபட்டதை-நினைவு*
*கொணரட்டும்...!*

*அன்பு நபியின்*
*அஹமது நபியின்*
*ஆலத்து ஹபீப்பின்*
*அரியணையில்*
*கருங்கொடியூர்*
*கண்ணியம் காத்த மகான்*
*அப்துல் மஜீத் பதிவுகள்*
*விண்ணகத்து றஹ்மானின்*
*மானசீக அப்து*
*ஆரிபுபில்லாஹ், ஆரிபு நாயகத்தை*
*கூடி நின்று கௌரவிக்கட்டும்!*
*வாழ்த்துப் பாடி*
*வரவேற்கட்டும்!*

*இன்னுமொரு நாள்... இந்த நாள்...*
*இந்த இனிய நாள்....*
*இன்பமுடன்*
*மொட்டவிழ்ந்து*
*இதழ் விரித்து*
*கனமாய்... காரமாய்*
*பூத்து விரியட்டும்!*

ஆசிரியை எம்.ஐ. தாஜுன்நிஸா
அக்கரைப்பற்று



## -நல்லாசி பொழிந்து வருகவே-

*ஏக இரட்சகனின்*
*ஏக தூதரே – எம்*
*மனம் நிறைந்த நபி போதகரே!*
*ஏவல் செய்திடும்*
*இழி அடியோர்களின்*
*அன்பு நிறை*
*எங்கள் ஸலாம்!*

*அண்ணல் நபியின்*
*அமைதி வழியில்*
*அகிலம் காக்கும்-இறை*
*நேயர்களே!*
*எங்கள் ஸலாம்!*

*எம் வாழ்வின் கறைகள்*
*அகற்றி வாழ்வில்*
*ஒளி ஏற்றிட*
*வாழ்வை வளமாக்கிட*
*வந்துதித்த எங்கள்*
*குருநாதரே!*
*கோமான் நபியின்*
*நாயிபுர் றஸுலே*
*எங்கள் ஸலாம்!*

*அருளின் உருவாய்*
*அவனியின் கருவாய்*
*அவன் பணியின் திருவாய்*
*அக்கரைப்பற்றின் – மணி*
*விளக்காய்*

*அண்ட கோடியின்*
*அற்புத அரசனின்-புனித*
*குதுபியத்தின் குத்பே!*
*காமில் ஷெய்க்கே*
*அருள் மாரி பொழியவே*
*வாருங்கள்!*

*அன்பு மழையில்-நாம்*
*நனைய*
*அன்புடனே வாருங்கள்*
*அடியார்களின் துயர் துடைக்க-இன்*
*மனம் கொண்டு*
*வாருங்கள்!*

*எம் உள்ளங்களில்*
*நிறைந்தவர்கள்- தெய்வ*
*நீள் நில வாழ்வில்*
*நிலைத்தவர்கள் – எம்*
*பாழ்பட்ட மனங்களை*
*பரிசுத்தப்படுத்தவே – பாசமுடன்*
*வாருங்கள்!*

*உள்ளுணர்வுகளை*
*உசுப்புகின்றவர்கள்*
*உள்ளமைக்காய் உழைப்பவர்கள்*
*ஹக்கானியத்தின்*
*பேர் ஒளியாய்*
*காசினிக்கு*
*வந்தவர்கள்*
*ஊதாரிகளாய்*
*உலகளக்கும்- எம்மை*
*மாட்சிமை மிகு வல்லோனின்*
*வீச்சுக்களில்*



*இணைத்திட*
*தயை காட்டி*
*வாருங்கள்!*

*வல்ல நாயனின் – அருள்*
*நயன விழி காட்டும்*
*மகாஞானியே!*
*மாண்புடன் வாருங்கள்*
*பல் ஞானம்*
*பாலாறாய் பொங்கி எழும்*
*மகா ஞானியே!*
*தவசீலர்களின்*
*தர்ம போதனையின்*
*தவஞானியே!*
*தயவு கொண்டு*
*வாருங்கள்!*

*ஞான வழி யோகிகளின்*
*ஞானத்தின் திறவுகோல்*
*வள்ளல் றஸூலை*
*வாகாய் சுமந்த*
*வானகத்து ஞானி*
*பாவிகளிலும்*
*பெரும் பாவிகள் – எம்மை*
*தீனுல் இஸ்லாத்தின்*
*தூதில் துவட்டிட*
*வினயமுடன்*
*வாருங்கள்!*

*பூமான் றஸூலின்*
*பூவுலக வாரிசு*
*தீரமிக்க அப்பாஸ் (றலி)*
*நெஞ்சுரச்சின்னம்*

*அபூபக்கர் (றலி)*
*குலத்தில் பூத்த மலர்*
*அப்துஸ்ஸமது மௌலானா என்னும்*
*நாயகத்தின் பேரர் அப்துல் மஜீத் என்னும்*
*நாயக செம்மல்*
*நானிலம் தழைக்கவே – நாளும்*
*வாருங்கள்!*

*குத்புனா ஹல்லாஜ் (றலி)*
*அனந்தர காரராம்*
*அவர் பாதையில் ஜனனித்தவராம்*
*பண்புகளின் உறைவிடமாம்*
*பாங்காய் பரிவு கொள்ள*
*வாரீர்கள்! வருகவே!!*

*மதீனத்து மாநபி மக்கள்- மனம்*
*குதூகலிக்க செய்தது போல்*
*வாரீர்கள்! வருக!*
*பாவிகள் நாம்*
*பரிதவிக்கும் – எம்மை*
*தூய்மைப்படுத்தும்*
*ஹஜரத் அஸ்வத்தே!*
*வருக! வருகவே!*
*நல்லாசி பொழிந்து வருகவே!*

மௌலவி எம். ஏ. பிர்னாஸ்(மன்பஈ)
அக்கரைப்பற்று



# அருள் கூடவே வழி நாடவே

*அஹதான நாயனால்*
*மணம் வீசும் மல்லிகை*
*அஹமது தூதரால்*
*ஒளிவீசும் தாரகை!!*
*ஹல்லாஜ் மன்ஸூரே..(ஆல்)*
*தீன் வீசும் புன்னகை*
*மக்கத்தார் வாப்பாவே..*
*அருள் நல்குபீர்களோ !!*
*(அஹதான)*

*அந்ரோத்தே தீபகட்ப*
*அன்பு முகம் கண்டீர்*
*பாடும் உமை போற்றினோம் மர்ஹபா,*
*ஆனந்தமே வாழ்வோ*
*மெய்ஞ்ஞானமே அறிவோ*
*நாம் உன் புகழ் பாடவா*
*பூரணமான ஷெய்க்கே*
*பூமான் நபியின் கண்ணே*
*அருள் கூடவே வழி நாடவே*
*மக்கத்தாரைப் போற்றிப் போ..!!*
*(அஹதான)*

*அக்கரைப்பற்றூரின்*
*அலங்கார தீபகற்பம்*
*வரவால் உமைப் போற்றினோம் மர்ஹபா,*
*குறைசி நபி இணைப்பில்*
*எமனி வழி தொடரில்*
*நான் உம் அருள் நாடவா*
*மெய்ஞான தேன் அமுதே*
*அப்துஸ் ஸமதின் மலரே*
*அருள் கூடவே வழி நாடவே*
*மக்கத்தாரைப் போற்றிப் போ...!!*
*(அஹதான)*

*இலங்கை எனும் தீவில்*
*இலங்கும் கண் மணியே*
*உயர்வான உமைப் போற்றினோம் மர்ஹபா,*
*கலிமாவின் காவலரே*
*தரீக்காவின் நாயகரே*
*நான் உம் வழி கூடவா*
*ஜலாலுத்தீனின் ஒளியே*
*ஹல்லாஜின் பேரொளியே*
*அருள் கூடவே வழி நாடவே*
*மக்கத்தாரை போற்றிப்போ..!!*
*(அஹதான)*

ஆசிரியர்
முஹம்மது அலியார் பைஸர்,
சாய்ந்தமருது.



## வானிருக்கும் நாள்வரைக்கும்..

*அக்கரைப்பற்றில்*
*ஆத்மீக ஞான பீடம்*
*அகமியம் போதிக்கும் தரீக்கா பீடம்*
*மஹ்ழறத்துல் காதிரிய்யா – எனும்*
*ஆன்மபீட ஆத்மகுரு*
*அறப்பணி புரியும் அருளே எம் வாப்பா...*

*அப்பாஸிக் குலத்தின் மேதை*
*அப்துஸ் ஸமது மௌலானாவின்*
*அருமைப் பேரனாய் – அவர்*
*வழி தொடர்ந்த – தியாகச் செம்மல்*
*அப்துல் வாஹிது மௌலானாவின்*
*பெருமைமிகு மருமகனாய் – மக்கத்தார்*
*அப்துஸ் ஸமது ஆலிமின்*
*எழில் மிகு ஏக புதல்வனாய்*
*உயர் குடும்பத்தில் அவதரித்த*
*உத்தமர் எம் வாப்பா..*

*பாசமிகு பெற்றோரின்*
*செல்லப்பிள்ளையாய்*
*பள்ளியில் முன்னணிச்சீடனாய்*
*நல்லொழுக்க ஆசானாய்*
*வழிகாட்டும் அதிபராய் – கண்திறக்க*
*உதவிய போதனாசிரியராய்*

*பார்போற்றும் பாடகனாய்*
*ஞானசித்திர நடிகனாய்*
*வாண்மைக் கவிஞனாய்*
*கரமிசைக்கும் இசைஞானியாய்*
*இல்லத்தரசியின் உளம் கவர் நாயகனாய்*
*முறைவழி மருத்துவனாய்*
*மாமேதையாய்*
*ஞானவழி தலைவனாய்*
*அள்ளிவழங்கும் வள்ளளாய்*
*களித்திருக்கும் நண்பனாய்*
*கனிந்திருக்கும் எம் வாப்பா...*

*கண்மணியாம் றஸூலுல்லாஹ்வின்*
*அடியொற்றி வாழ்ந்து – வந்த*
*ஆண்டகை முஹையிதீனின்*
*அறப் போதனையில்*
*அறநெறி கண்ட – எம்*
*ஹல்லாஜ் வாப்பாவின்*
*அமுதுண்ட அழகு நிலா*
*அப்துல் மஜீத் – எனும்*
*ஞான உலா!*
*எம் அன்பு நிறை*
*மக்கத்தார் வாப்பா!*
*வாய் திறந்து நானும்*
*சொல்கின்றேன்*
*சில வரிகள்..*

*ஹல்லாஜ் மகாமெனும்*
*ஆத்மீக ஆலையிலே;*
*புடம் போடப்பட்ட*



*மாசிலாத்தங்கம் – எங்கள்*
*மக்கத்தார் வாப்பா- அவர்*
*சுய விருப்பின் பேரில்*
*பேசியதில்லை ஒரு நாளும்*
*இறைவாக்கு அன்றி*
*பிற வாக்கு சொன்னதில்லை...*

*எம் போன்ற கீழோர் – அகக்*
*கண்ணைத் திறப்பதற்காய்*
*தம் வாழ்வை அர்ப்பணிக்கும்*
*ஆத்மீகத் தந்தையே !- எம்மை*
*அரவணைத்து ... ஆதரித்து...*
*அருள் சொரியும் தந்தையே!*
*வாழ வேண்டும்- நீங்கள்*
*வானிருக்கும் நாள் வரைக்கும்*
*நாம் இருக்க வேண்டும்- உங்கள்*
*அன்புக் காலடியில்*
*பாசமிக்க தந்தைக்கு – என்*
*உளம் கனிந்த காணிக்கை...*

ஆசிரியர் மீராலெப்பை மஹ்பூர்,
அட்டாளைச்சேனை

# தருமத்தின் நாதரே

*வருக வருக வருகவே*
*மக்கத்தார் வாப்பா வருகவே*
*எங்கும் அருள் மழை பொழியவே*
*உங்கள் நல்லாசி பெருகவே !!*

*(வருக)*

*பேரிறைவன் விலாயத் பெற்ற*
*பேரின்ப நேசராய்*
*நபிநாதர் ஒளியில் நிலைத்த*
*நாயிபுர் றஸூல் தனாய்*
*முஹையித்தீன் தரீக்கா வழியில்*
*முத்தலக்கே வருகவே!!*

*(வருக)*

*ஜலாலுத்தீன் குதுப் வலியின்*
*கந்தூரி அருள் விழா*
*புவியோர்கள் மகிழ்ந்திடவே*
*தருமத்தின் நாதரே*
*பேரொளியாய் வழியைக் காட்டும்*
*மக்கத்தார் வாப்பாவே!!*

*(வருக)*



*பஹ்ருல் இல்ஹாம் ஹல்லாஜின்*
*இணையில்லா சர்கலிபா*
*அப்துஸ் ஸமது ஆலிம் மகனாய்*
*துஹ்பா உம்மா நன்மணியே*
*உள்ளத்தில் இருளைப் போக்கும்*
*குதுபுனா வருகவே!!*

*(வருக)*

*எங்கள் வழியில் ஞானம் மிளிர*
*உயர்ந்த நிலை காணவே*
*இன்ஷானுல் காமிலாக*
*உண்மைநிலை தோன்றவே*
*உங்கள் சேவை என்றும் நாங்கள்*
*சுவன நிலை நாடவே!!*

*(வருக)*

ஆசிரியர்
முஹம்மது அலியார் பைஸர்
சாய்ந்தமருது

## ஷேகே இல்லாத பாதை திசைமாறுமே

*ஷேகே உம் பாதையில்*
*சீர் கண்டு வாழ்கிறோம்*
*ஷேகென்று உம்மைத்தான்*
*உளமாற ஏற்கின்றோம் ஷேகே*

*(ஷேகே)*

*ஷேகே இல்லத பாதை*
*திசை மாறுமே*
*நேசம் உம் பாசம் கண்டால்*
*நிலை பேறுமே*
*உணர்விலே உயர்ந்து நாம்*
*உளமாறப் போற்றுவோம் ஷேகே*

*(ஷேகே)*

*மேகம் படர்ந்த வானில்*
*நிலவில்லையே*
*குரு கண்டிராத கல்பில்*
*நிறைவில்லையே*
*இறைவனின் நாட்டமே*
*எமக்கும்மை ஈர்த்ததே ஷேகே*

*(ஷேகே)*



*தரீக்கா வழிமுறைதான்*
*நிறைவாகுமே*
*ஷேகே உம் நடைமுறைதான்*
*வழிகாட்டுமே*
*அகமெல்லாம் குளிர்ந்து நாம்*
*வரவேற்று மகிழ்கிறோம் ஷேகே*

*(ஷேகே)*

*உம் பாதம் சுமந்து நாங்கள்*
*நிதம் வாழ்கிறோம்*
*உம் நேசம் கண்டு நாங்கள்*
*தினம் மகிழ்கிறோம்*
*நாதரே உம் வரவினால்*
*எம்முள்ளம் மலருதே ஷேகே*

*(ஷேகே)*

பாடல் :
நாகூரே மஜீத் ( நீதிமன்றம்),
எம், ஏ. லாபிர்,
அக்கரைப்பற்று

கவியாக்கம் :
கவிஞர் பாலமுனை பாறூக்

# வரவேற்பின் முத்தாய்ப்பாய்..

**அல்குத்ப், அஷ்ஷெய்க், அப்துல் மஜீத் மக்கத்தார் வாப்பா**

வபில்லாஹி தௌபீக்- அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபறகாத்துஹு.

சர்வ உலகங்களையும் படைத்து இரட்சித்துக் காப்பாறுகின்ற எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே சர்வ புகழும் உண்டாகட்டும். அவன் தூதர் எங்கள் கண்மணி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கும் ஸஹாபாக்கள் குடும்பத்தினர் எல்லோருக்கும் சாந்தியும் சமாதானமும் வேண்டியவனாய் ஆரம்பம் செய்கின்றேன்.

இந்த உலகங்களை அல்லாஹுத்தஆலா ஹக்கைக் கொண்டே படைத்துள்ளான். **“வானங்களையும் பூமியையும் அல்லாஹ் ஹக்கைக் கொண்டே படைத்துள்ளான். மு.்.மீன்களுக்கு இதில் அத்தாட்சி உண்டு”** – (அன்கபூத் -44) படைப்புக்களை அல்லாஹ் ஏனோதானோ என்று படைக்கவில்லை. அவனது உள்ளமையை வெளிப்படுத்திய அவனது கற்பனைகளே இவ்வுலகங்கள். எனவே ஒரு மு.்.மின் ஹக்கை நோட்டமிடுவதுதான் அவனது அதியுயர் அறிவாகும். மனிதனது கற்பனைகளை விடுத்து, அவனது உண்மையை உணரச் செய்வதேதான் சன்மார்க்கமாகும். அல்குர்ஆன் கூறுகிறது **“நிச்சயமாக (உண்மையான) மு.்.மின்கள் யார் என்றால் அவர்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதும் ஈமான் கொண்டு பின்னர் (அது பற்றி அவர்கள்) சந்தேகமும் கொள்ளாது செல்வங்களைக் கொண்டும் தம் உயிர்களைக் கொண்டும் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்வார்கள். இத்தகையவர்கள்தான் உண்மையானவர்கள்”** (அல்ஹுஜறாத் -15)



இவ்வசனம் மு.்.மின்களைப் பற்றி கூறப்பட்டதாகும். இதில் தம் பொருட்களைக் கொண்டும் என்பதில் முந்தியும், பிந்தியும் பொருள் என்பதன் கருத்து செல்வம்தான். ஆனால் தம் உயிர்களைக் கொண்டும் என்பதில் முந்தி வாள் கொண்டு போர் புரிதலையும் பிந்தி தன்மனதில் உள்ள மனநோய்களைப் போறாடி அகற்றுவதையும் குறிக்கும். ஏனெனில் யுத்தகளத்தில் நின்றும் வெற்றிவாகையுடன் திரும்பிய தனது தோழர்களைப் பார்த்து நாம் சிறிய போரில் நின்றும் மீண்டிருக்கின்றோம். இனிமேல் நாம் அதைவிடப் பெரிய போர் ஒன்றிலிருந்து மீளவேண்டும் என்று றஸூல் நாயகம் சொன்னார்கள். அது எது நாயகமே என்ற நபித்தோழர்களின் கேள்விக்கு “உங்கள் மனதோடு போராடுவது” என்று றஸூல் நாயகம் பதில் கூறினார்கள்.

இத்தகைய ஒரு பணியை செய்பவர்தான் ஷேகு என்று கூறப்படும் இறைநேசர்களாகும். இத்தகைய ஒரு பாரிய பணியை மேற்கொண்டவர்தான் எங்கள் ஆத்மீக தந்தை குத்புனா, அஸ்-ஸெய்யித், அஷ்-ஷெய்க் ஹல்லாஜுல் மன்ஸூர் (காதிரிய்யி, ஜிஷ்த்திய்யி, றிபாஇய்யி, நக்ஷபந்திய்யி) அவர்களாகும். இவரது ஸில்ஸிலா தொடரில் வரும் அனைவரும் இத்தகைய உயர்நிலை அடைந்த மார்க்க மேதைகளாகும். இவர்களைத்தான் முஹக்கிகீன்கள் என்று கூறப்படும்.

எனக்கு தற்போது அளித்துள்ள அத்தனை கௌரவங்களும் வரவேற்பும் அவர்கள் ஊடாக அல்லாஹுவைச் சார்ந்ததாகும். அல்லாஹுத்தஆலா அவர்கள் மூலம் அளித்த அறிவைவிட என்னிடம் வேறு அறிவு இல்லை. வெற்றியடைந்தவர்கள் எல்லாம் வெற்றியடைந்தவர்களின் சகவாசம் இன்றி வெற்றியடைந்ததில்லை. ஓடும் நீரில் நீந்த வேண்டிய அவசியம் இல்லை. இதில் கிடக்கத் தெரிந்தால் போதும். அது சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்துவிடும். என்ற ஒரு பெரியார் ஒருவரின் கூற்றுக்கு இணங்க

அவர்களோடு அண்டியிருந்தால் போதும். நாம் நேர்வழியை உணர்ந்து கொள்ளமுடியும். குகைவாசிகளுடன் சேர்ந்த நாய் சுவர்க்கம் போனதுபோல் எமக்கும் அந்த நிலை ஏற்படும். ஸூறத்துல் பாத்திஹாவில் இறைவன் கூறுகின்றான் **“இறைவா எனக்கு நேரிய பாதையை காட்டியருள், நீ யாருக்கு நி.ஃமத்துச் செய்தாயோ அத்தகையோர் சென்ற பாதை என்று”.**

அன்பு, நேசம் இவைகளின் பரிமாற்றமே மனித உயர்வுக்கும் இறைதரிசனத்திற்கும் வழிவகுக்கக் கூடியது. ஒரு பாவியின் பாவத்தையும் அல்லாஹ் மன்னிக்கிறான். அவன் கசிந்து மனம் உருகி பாவமன்னிப்புக் கேட்கும் போது. கசிந்து மனமுருகுதல் என்பது அன்பின்பாற் பட்டதொன்றாகும். எனவே மனித நேயம் பாதுகாக்கப்படுவதும் இத்தகைய முயற்சியிலேயாகும். என்னை நீங்கள் மேன்மைப்படுத்தியதில்லை விடயம் நீங்கள் மேன்மையடைய அல்லாஹ் உங்களுக்குக் காட்டிய வழிதான் இவைகள். றஸூலுல்லாஹ்வைப் புகழ்வதும் மேன்மைப்படுத்துவதும் அவரைக் கௌரைப்பதற்காக மட்டுமில்லை. அல்லாஹ் நம்மை மேன்மைப்படுத்த எடுத்த முயற்சியேயாகும். **“அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியதால் உமக்கு உபகாரம் செய்துவிட்டதாக கருதுகிறார்கள். நீங்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியதால் எனக்கு உபகாரம் செய்துவிட்டதாகக் கருதாதீர்கள். எனினும் நீங்கள் உண்மையாளர்களாக இருப்பின் ஈமானின் நேர்வழியில் உங்களைச் சேர்த்ததனால் அல்லாஹ்தான் உங்கள் மீது உபகாரம் செய்திருக்கின்றான் என்று நபியே நீர் கூறுவீராக”** (அல்ஹுஜராத் 17) என்பதை இந்த திருமறை வசனத்தை நோட்டமிட்டால் நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

இத்தகைய நேர்வழி காட்டும் இந்தத் தரிக்கா வழிமுறையில் வாழ்ந்து ஷேகுமார்களின் பறக்கத்தைப் பெற்று இறை (லிகா) சந்நிதியை அடையும் பாகியத்தை அருளவேண்டி முடிக்கின்றேன்.

**வஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்**



